**முதலாவது கூடுதல்  சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**O.S. No.317/2024**

**Witness DW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவநாதன் | தொழில் | |
| த/பெ | கண்ணப்பன் | வயது | |
| ஊர் | | தேதி | 18.04.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (18.04.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

வழக்கின் குறிப்பிடப்பட்டுள்ள வாதி எனது மகள். இந்த வழக்கை வாதியானவர் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து மொத்தம் 4 இன சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் 3 ல் 1 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. 2ம் பிரதிவாதி எனது மகன் என்றால் சரி. 4வது பிரதிவாதி என்பவர் நான் விற்ற சொத்தினை கிரையம் பெற்ற நபர். இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 3 இன சொத்துக்களானது எனது அண்ணன் பாகபிரிவினை வாயிலாக கொடுத்தது என்றால் சரி. பாகபிரிவினையானது 17.12.2008 ம் தேதி நடைபெற்றது என்றாலும் அந்த ஆவண எண். 3379/2008 என்றுசொன்னால் சரி அதில் எனக்கு சி அட்டவணை சொத்தாக பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரி. அந்த சொத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சொத்திலிருந்து நான் கிரையம் வாங்கியது தான் 4வது இன சொத்து என்றுசொன்னால் இல்லை. மகேஷ்வரி என்பவர் விழுப்புரம் மாவட்ட நீதிமன்றத்தில் பாக பிரிவினை கோரி ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரி. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணை மற்றும் உத்தரவு என்றுசொன்னால் அது **வா.சா.ஆ 13 மற்றும் 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கில் என்னை மட்டும் தான் பிரதிவாதியாக சேர்த்துள்ளனர் என்றால் சரி. அந்த வழக்கின் இந்த வழக்கின் வாதி சுபஸ்ரீ மற்றும்அவரது தாயாரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றுசொன்னால் சரி.  அசல் வழக்கு 14/2014 என்ற வழக்கு தாக்கல் செய்யப்படும் காலத்தில்

இந்த வழக்கின் வாதி பிறந்துவிட்டார் என்றுசொன்னால் சரி. அந்த அசல் வழக்கில் எனக்கு பிறந்த மகள் ஒருவர் இருக்கிறார் என்று நான் எனது பதிலுரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நானும் எனது மகனான 2வது பிரதிவாதி சேர்ந்து மகேஷ்வரி என்பவர் மீது கூட்டு சேர்ந்து தவறான வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றுசொன்னால் சரியல்ல. வாதியை தரப்பினராக சேர்க்கப்படாமல் பிறப்பிக்கப்பட்ட வா.சா.ஆ 13 மற்றும் 14 செல்லத்தக்கதல்ல என்றுசொன்னால் சரி. வழக்கு சொத்தில் 3ல் 1 பாகம் வாதிக்கு கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றுசொன்னால்சரி. 4வது இன சொத்தினை 2ம் பிரதிவாதியை வளர்ப்பதற்காக நான் விற்பனை செய்துள்ளதால் அந்த விற்பனை செல்லத்தக்கதல்ல என்பதாலும் அது வாதியை கட்டுப்படுத்தாது என்பதாலும் அந்த விற்பனை ஆவணம் ரத்து செய்யப்படவேண்டும் என்றுசொன்னால் நான் எனது மகனை வளர்ப்பதற்காக விற்கவில்லை வீட்டினை கட்டுவதற்காக விற்பனை செய்துள்ளேன். நான் கட்டிய வீட்டினை பிரசன்னா மற்றும் அவரது தாயார் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரி. அதனால் இந்த வழக்கு தாவா பேரில் தீர்ப்பாக வேண்டும் என்றுசொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S.Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram